**தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிறகு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழு கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில்

அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட, ரூபா 9,441,684 வான ஆதனம், பொறிகள் மற்றும் உபகரனங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் தேய்மானம் செய்யப்படவில்லையென்பதுடன், நிதி கூற்றுக்ககளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்புகளிலும் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரனங்களிலும் தேய்மான விகிதங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து, ஆதனம், பொறிகள் மற்றும் உபகரனங்கள் பொருத்தமான தேய்மான சதவீதம் தீர்மானிக்கப்பட்டு தேய்மானம் செய்யப்படும். | இலங்கை பொதுத்துறை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மூலதன மானியங்கள் கணக்கீடு செய்வதற்காக பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு முறைமையானது நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லையென்பதுடன் மூலதன மானியங்கள் காலக்களிவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | மூலதன மானியங்களைத் தேய்மானத்திற்குட்படுத்தல் அடுத்த ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும் என்பதுடன் ஆணைக்குழு முதல் முறையாக கணக்குகளை சமர்ப்பித்ததால், மூலதன மானியங்களுக்கான கணக்கீடு முறைமை தவறுதலாக நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அடுத்த ஆண்டு முதல் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன மானியங்கள் கணக்கீடு செய்வதற்காக பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு முறைமையானது நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில், கணினி கருவிகளை கொள்வனவு செய்வதற்காக பணமாக செலவிடப்பட்டிருந்த ரூபா 429,657 காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 512,157 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 82,500 ஆன முற்பணச் செலவின் குறைவு காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு மற்றும் சம்பள தயாரிப்பு மென்பொருளை நிறுவுவதற்காக 2020 இல் செலுத்தப்பட்ட 50 சதவீத முன்பணத்தின் மீளாய்வாண்டில், கணக்கிடப்பட்டதன் காரணமாக இந்த மாற்றம் ஏற்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்கய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தோகை<br>ரூபா | கிடைக்பெறாத கணக்கய் சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரனங்கள் | 8,677,962 | உறுதிப்படுத்தலுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கைகள் | ஆணைக்குளுவுக்காக கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து ஆதனம், பொறிகள் மற்றும் உபகரனங்கள் கிரயத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளதுடன், ஆணைக்குளுவுக்காக வழங்கப்பட்ட உபகரணங்களின் கொள் விலை அல்லது கிரயம் தெரியாததால், அந்த உபகரணங்களின் பெறுமதி மதிப்பீட்டு குழு மூலம் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீதியை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்கள் கணக்கய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பொது நிர்வாக சுற்று நிருபம்** | | | |
| (i) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 இலக்க சுற்று நிருபம் | அனைத்து அரச நிறுவனங்களும் விரல் அடையால பதிவு செய்யும் இயந்திரங்களைப் உபயோகிப்பதன் ஊடாக அதிகாரிகளின் அலுவலகத்திற்குள் நுழையும் மற்றும் வெளியேறும் பதிவுகளை உறுதிபடுத்துவதற்கான அறிக்கை பேணப்படவேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2022 செப்டம்பர் 26 இலும் ஆணைக்குழு விரல் அடையால பதிவு செய்யும் இயந்திரங்களைஉபயோகப்படுத்தியிருக்கவில்லை. | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டபடி, விரல் அடையால பதிவு செய்யும் இயந்திரங்களை எதிர்காலத்தில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்று நிருபம் | ஆணைக்குழுவினால் 2021ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கோவிட் 19 சூழ்நிலையில் அவ்வாறு செய்ய இயலவில்லை என்றாலும், 2021 டிசம்பர் மாதத்தில் கோப்புப் பராமரிப்பு தொடர்பான வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், 2022ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) பொது நிதிச் சுற்று நிருபம்**

| | | | |
|---|---|---|---|
| (i) 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க சுற்று நிருபம் | ஆணைக்குழுவினால் 2021 ஆம் ஆண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் சுற்று நிருபத்தின் பிரகாரம் காணப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் ஆணைக்குழுவிடம் காணப்படுவதுடன் அதன் பிரதியொன்றை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்று நிருபம் | ஆணைக்குழுவினால் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு சபையொன்று நியமிக்கப்பட்டபோதிலும், ஆணைக்குழுவில் பணியாளர் வெற்றிடங்கள் காணப்பட்டதாலும், பணியமர்த்தப்பட்ட பெரும்பாலான அலுவலர்கள் வெற்றிட பதவிகளுக்கு கடமைகளை நிரப்புவதற்கு நேர்ந்ததாலும், மற்றும் கோவிட் தொற்றுநோய் காரணமாக அதிகாரிகளை பணிக்கு அழைப்பதில், வரையறை காரணமாகவும் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் தாமதமாகின. இருப்பினும், தற்போது பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 72,237 பற்றாக்குறையாகும். ஆணைக்குழு மீளாய்வாண்டில் முதல் தடவையாக கூட்டுத்தாபனமாக நிதி கூற்றுக்கள் தயாரித்தல் காரணமாக நிதி விளைவுகளை இணக்கம் செய்ய முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 16(1) இன் பிரகாரம், ஆணைக்குழுவிற்கு பிரத்தியேக நிதியமொன்று இருக்க வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2022 செப்டம்பர் 26 இலும் அத்தகைய நிதியமொன்றை நிறுவத் தவறிவிட்டது. | 2019 ஆம் ஆண்டு முதல், பொது நிதித் திணைக்களம், பொதுக் கணக்கீட்டுத் திணைக்களம், தேசிய பாதீட்டுத் திணைக்களம், திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி, இந்த நிதியத்திற்கு தேவையான வங்கிக் கணக்கை ஆரம்பிப்பதற்கு ஆணைக்குழுவினால் பெரும் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வழங்கிய பணிப்புரையின் பிரகாரம், மிக விரைவில் நிதியத்தை ஸ்தாபிக்க ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது. | சட்டத்தின் பிரிவு 16(1) இன் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு பிரத்தியேக நிதியமொன்று நிறுவப்பட வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 13 இன் பிரகாரம், ஆணைக்குழுவின் நிறைவேற்று அதிகாரி, பணிப்பாலர் நாயகமாக காணப்பட வேண்டியதுடன், ஆணைக்குழுவின் பணிகலை மேற்கொள்வதற்குத் தேவையென தீர்மானிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையை ஆணைக்குழுவினால் நிர்னயிக்கும். அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 26 ஆக இருந்த போதிலும், உண்மையான ஊழியர்களின் | தேசிய பாதீட்டு சுற்று நிருபம் 03/2020 ஆம் இலக்க ஏற்பாட்டின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படுவதோடு அந்த சுற்றறிக்கை நீக்கப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். | அத்தியாவசியமான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

எண்ணிக்கை 14 ஆக இருந்தது. இதனால் 12 வெற்றிடங்கள் காணப்பட்டது. இதற்கிடையில், தலைமை நிறைவேற்று அதிகாரி, பதவி வெற்றிடமாக இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 21 ஆம் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பான செயல்பாட்டுக் கையேட்டின் பிரிவு 6.6 இன் படி, பொது முயற்சிகளினால் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதி கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவினால் நிதி அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, 2022 மே 23 ஆம் திகதியிலேயாகும். அதன்படி, 84 நாட்கள் தாமதத்துடன் நிதி கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படிருந்தது. | 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 11(1) இன் படி, சபையொன்றாக நிதி கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்ப:வது முதல் முறையாக மேற்கொள்ளப்பட்டது 2021 ஆம் ஆண்டிற்காக வாகும். அதன் போது ஏற்பட்ட பல்வேறு சிக்கலான சூழ்நிலைகள் காரணமாக நிதி கூற்றுக்கள் தயாரித்தல் 2022 பெப்ரவரி மாத இறுதியில் நிறைவடைந்த போதிலும், இந்த நிதி கூற்றுக்களுக்கான ஆணைக்குழுவின் ஒப்புதலுக்காக 2022 மார்ச் 30 ஆம் திகதி அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக நிதி கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபடுவதில் தாமதம் ஏற்பட்டது. | பொது முயற்சிகள் தொடர்பான செயல்பாட்டுக் கையேட்டின் பிரிவு 6.6 இன் படி, பொது முயற்சிகளினால் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதி கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபட வேண்டும். |